# Ubin Tides

Friends of Ubin Network

乌敏岛
Issue 1
May-Oct 2018
PULAU UBIN

## தலைவரின் செய்தி

அன்பார்ந்த நண்பர்களே,

உபின் அலைகள் செய்திக்கடிதத்தை மீண்டும் தொடங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். "*உபின் அலைகள்*" என்ற பெயர் உபின் தீவின் உயிரோட்டத்தைப் பிரதிபலிக்கிறது. அதைபோல், இந்தச் செய்திக்கடிதம் தீவின் மரபுடைமையைப் போற்றிக் கொண்டாடி, பயன்மிக்கப் புதிய முனைப்புகளை எடுத்துக்காட்டும் என நம்புகிறோம்.

*உபின் அலைகள்* செய்திக்கடிதம் ஆகக் கடைசியாகக் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குமுன் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், உபினின் கவர்ச்சி இன்றுவரை மாறாமல் நிலைத்திருக்கிறது. The Ubin Project திட்டப்பணி 2014-ல் தொடங்கப்பட்டது. கடந்தகாலத்தை நினைவுகூர்ந்து, நிகழ்காலத்தைக் கொண்டாடி, எதிர்காலத்திற்காகப் பாதுகாக்கப்படவேண்டிய பழக்கப்பட்ட, கிராமியச் சூழல்மிக்க இடமாக உபினைக் கட்டிக்காக்கும் எங்களின் கடப்பாட்டை இத்திட்டப்பணி பிரதிநிதிக்கிறது. Friends of Ubin Network அமைப்பு, குடியிருப்பாளர்களை ஈடுபடுத்துவதிலும், தீவின் சமூகம், மரபுடைமை, வரலாறு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளிலும் அண்மையில் கவனம் செலுத்தி வருவதால், *உபின் அலைகள்* செய்திக்கடிதத்தை உயிர்ப்பிக்க இதுவே தகுந்த தருணம் என நாங்கள் நினைத்தோம். இதன்வழி, தீவின் அண்மை செய்திகளையும் தீவில் நடைபெறும் நடவடிக்கைகளையும் குடியிருப்பாளர்களுக்கும் வருகையாளர்களுக்கும் தெரியப்படுத்த இயலும்.

*உபின் அலைகள்* செய்திக்கடிதத்தின் இந்தப் பதிப்பில், குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டப்பணிகளும் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தவும் உள்கட்டமைப்பைப் பராமரிக்கவும் தேசிய பூங்காக் கழகம் மேற்கொள்ளும் பணிகளும் இடம்பெறுகின்றன (பக்கம் 3). பிப்ரவரி மாதம் தேசிய பூங்காக் கழகமும் Kawan Ubin அமைப்பும் இணைந்து செயல்பட்டு, அக்கால மற்றும் இக்காலக் குடியிருப்பாளர்களுக்காக முதல் *Balik Kampung* ஒன்றுகூடல் விருந்து நிகழ்ச்சியை நடத்தின (பக்கம் 3). உங்களோடு சேர்ந்து செயல்பட்டு, சிறப்புமிக்க இத்தீவை இன்னும் பல ஆண்டுகாலத்திற்கு மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஆவலாக இருக்கிறோம்.

எப்போதும் போலவே, உபின் தீவுக்காக உங்களிடம் ஏதேனும் புதிய யோசனைகள் இருந்தால் அவற்றை வரவேற்கிறோம். இதற்கிடையில், *உபின் அலைகள்* செய்திக்கடிதத்தைப் படித்து மகிழ்வீர்கள் என நம்புகிறோம். கூடிய விரைவில் உங்களை (உபினில்) சந்திக்க எதிர்பார்த்திருக்கிறேன்.

உங்கள் உளமார்ந்த,
டெஸ்மண்ட் லீ
சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சர்,
இரண்டாம் தேசிய வளர்ச்சி அமைச்சர்










NATIONAL PARKS
LET'S MAKE SINGAPORE OUR GARDEN
Friends of Ubin
nparksbuzz
Share your love for nature with us at
#nparksbuzz

# The Ubin Project

**உபின் தீவின் இயற்கைச் சூழலை உணர்வுபூர்வமான முறையில் மேம்படுத்தி, அதன் மரபுடைமையையும் கிராமியக் கவர்ச்சியையும் எதிர்காலத் தலைமுறை சிங்கப்பூரர்களுக்காகக் கட்டிக்காக்க, சமூகத்துடன் சேர்ந்து தற்போதைய முனைப்புகளை முன்னெடுத்துச் செல்வது 2014-ல் தொடங்கப்பட்ட The Ubin Project திட்டப்பணியின் நோக்கம். இதனை அடைய உதவியாக, இளையர்கள், குடியிருப்பாளர்கள், ஆய்வாளர்கள், தொண்டூழியர்கள், மரபுடைமை மற்றும் இயற்கை காக்கும் குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கும் Friends of Ubin Network (FUN) அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த நண்பர் வட்டம், The Ubin Project திட்டப்பணியின் முனைப்புகளை வழிநடத்திச் செல்கிறது. திட்டப்பணிக்கு ஐந்து முக்கிய இலக்குகள் உள்ளன. அவற்றை நிறைவேற்ற இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகளைப் பார்ப்போம்.**

## சமூகம், மரபுடைமை, வரலாறு

உபின் தீவில் ஒரு திருப்பத்தை உண்டாக்க உதவும் முனைப்புகளுக்குச் சமூகக் குழுக்கள் ஈடுபாட்டுடன் ஏற்பாடு செய்து வழிநடத்த The Ubin Project திட்டப்பணி ஊக்கமளிக்கிறது. முக்கிய சமூக முனைப்புகளில் வருடாந்தர Pesta Ubin பொது வரவேற்பு விழா, Balik Kampung Party ஒன்றுகூடல் நிகழ்ச்சி, கம்பத்து கட்டடங்கள் சீரமைப்பு ஆகியவை உள்ளடங்கும். அவ்வாறு சீரமைத்து புதுப்பிக்கப்பட்ட பாரம்பரிய வீடுகளில் ஒன்று Teck Seng's Place. பாரம்பரியமிக்க இந்தச் சீனக் கம்பத்து வீடு, உபின் தீவின் கலாசார மரபுடைமையைப் பொதுமக்கள் கற்றுக்கொள்ளும் வகையில் திறந்து விடப்பட்டுள்ளது. வீட்டிலுள்ள புகைப்படங்கள், காட்சிப் பொருட்கள் பலவும் உள்ளூர் உபின் சமூகத்தினரால் வழங்கப்பட்டன.



*Balik Kampung Party ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்கு Kawan Ubin அமைப்பு 24 பிப்ரவரி 2018 அன்று ஏற்பாடு செய்திருந்தது. கிட்டத்தட்ட 140 தற்போதைய, முன்னாள் உபின் குடியிருப்பாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஒன்றுகூடலில் கலந்து கொண்டனர். சமூக ஒன்றுகூடல் தொடர் நிகழ்ச்சிகளில் இது முதலாவது. Balik Kampung Party நிகழ்ச்சியில் விளையாட்டுகள், விருந்துணவு, விளக்கப்படம் திரையீடு, "லோஹெய்" அங்கம் அனைத்தும் நடைபெற்றன.*

*படம்: Geoffrey Benjamin*

## கல்வியும் ஆய்வும்

கள ஆய்வு, கல்வி, சமூக எட்டுதல் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த மையமான Ubin Living Lab (ULL), 2016 பிப்ரவரி மாதம் திறக்கப்பட்டதிலிருந்து பல்வேறு வகையான கல்வி, எட்டுதல் நிகழ்ச்சிகளையும், ஆய்வு நடவடிக்கைகளையும், வெளிப்புற முகாம்களையும் நடத்தியிருக்கிறது.

சிங்கப்பூரில் காணப்படும் சதுப்புநிலத் தாவரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் சதுப்புநிலப் பயிர்த் தோட்டமும் ULL-ல் உள்ளது. தற்போது நடைபெற்றுவரும் ஈராண்டுகால Comprehensive Ubin Biodiversity Survey (CUBS) ஆய்வுக்கும் தொண்டூழியர்கள் பங்களிக்கின்றனர். இந்த ஆய்வின்மூலம் திரட்டப்படும் தகவல்கள், நமது இயற்கை மரபுடைமையின் நிர்வாகத்திற்கும், இருப்பிட மேம்பாட்டுக்கும், உயிரின மீட்புத் திட்டப்பணிகளுக்கும், எதிர்கால ஆய்வுத் திட்டங்களுக்கும் துணை புரியும்.



*ஆய்வுக்கான பயிற்சி அங்கத்தில் தொண்டூழியர்கள் பயிற்சி பெறுகின்றனர்*

*புகைப்படம்: Vilma D'Rozario*

## இயற்கை சார்ந்த பொழுதுபோக்கு

சமூகத்தினரின் பல்வேறு பங்களிப்புகளுடன், உபின் தீவின் இயற்கையை வருகையாளர்கள் இப்போது மேன்மேலும் ரசித்து மகிழ முடியும். தீவைச் சுற்றிலும் அறிமுகமாகியுள்ள புதிய உலாக்கள், புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட Chek Jawa Visitor Centre மற்றும் Nature Gallery ஆகியவற்றிலுள்ள புகைப்படங்கள் போன்றவை சமூகத்தினரின் பங்களிப்புக்கான சில எடுத்துக்காட்டுகள். ButterflyCircle குழுவைச் சேர்ந்த பட்டாம்பூச்சி ஆர்வலர்கள், பட்டாம்பூச்சி குன்றிலுள்ள புதிய பொறிப்புப்பலகைகளுக்கான புகைப்படங்களையும் விளக்கங்களையும் வழங்கினர். நீ ஆன் பலதுறைத் தொழில்கல்லூரி மாணவர்கள் உபின் பழத் தோட்டத்தில் 30க்கும் மேலான உள்ளூர் பழமர வகைகளை நட்டனர். நன்யாங் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், நடப்பட்ட பழமர வகைகளை மையப்படுத்தி அறிவூட்டும் தகவல் பலகைகளை உருவாக்கினர்.



*உலா பங்கேற்பாளர்கள் தீவின் கலாசார, இயற்கை மரபுடைமையைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளும் வகையில், தொண்டூழியர்கள் அவர்களைத் தீவைச் சுற்றிலும் அழைத்துச் சென்று, Kampung Tour, Rustic Reflections Tour உலாக்களை நடத்த உதவி செய்கின்றனர்.*

## நீடித்து நிலைக்கத்தக்க வடிவமைப்பும் நடைமுறைகளும்

2017-ல் அறிமுகமான Ubin Way நன்னடத்தைக் குறியீடு, தீவுக்கு வருகை தருவோர் சுற்றுப்புறத்திற்கு உகந்த, சமூகப் பொறுப்புமிக்க முறையில் நடந்து கொள்ளவும், நட்பார்ந்த உரையாடலின்மூலம் கிராமவாசிகளையும் தீவையும் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும் ஊக்கமளிக்கிறது. FUN அமைப்பால் தொடங்கப்பட்டு, அனைவராலும் ஆதரிக்கப்படும் நன்னடத்தைக் குறியீடு, அறிவிப்புப் பலகைகள், காணொளி, இணையத்தளம் ஆகியவற்றின் மூலம் தீவு முழுவதும் அறிவுறுத்தப்படுகிறது. Ubin Way நன்னடத்தைக் குறியீடு பற்றி www.ubin.sg இணையத்தளத்தில் மேல்விவரம் அறிந்திடுங்கள்.

## உயிரினப் பன்மயப் பாதுகாப்பு

FUN அமைப்பின் பங்களிப்புடன், இயற்கை உயிரினப் பன்மயத்தை அறிமுகப்படுத்தவும் பாதுகாக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கென, உயிரின இருப்பிட மேம்பாட்டுத் திட்டங்களும் உயிரின மீட்புத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. காடு, நன்னீர் ஈரநிலங்கள், சதுப்புநிலம், கரையோர இருப்பிடங்கள் ஆகியவற்றைச் சீரமைக்கவும், அரிய வகை தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றின் இயல்பான எண்ணிக்கையைப் பெருக்குவதற்கான வழிகளை ஆராயவும் பல்வேறு பங்காளர்களைத் தேசிய பூங்காக் கழகம் ஈடுபடுத்தியது. வௌவால் குடியிருப்புகள், பெட்டிகள், நீர்நாய் பதுங்குமிடங்கள் மற்றும் தூக்கனாங்குருவி *(Ploceus philippinus)*, நீலத் தொண்டையுள்ள தேனீ உண்ணி *(Merops viridis)*, சிவப்பு நீர்ப்பறவை *(Vanellus indicus)* ஆகிய பறவைகளின் கூடுகள் ஆகியவற்றைக் கண்காணிக்க தொழில்நுட்பக் கல்விக்கழகம் (கிழக்கு) போன்ற பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் துணை புரிந்தனர். 2016-ல் அமைக்கப்பட்ட இரண்டு வௌவால் குடியிருப்புகளில் இரத்தம் உறிஞ்சும் *(Megaderma spasma)* வௌவால்கள் வசிக்கின்றன.

சமூகம் வழிநடத்திய Restore Ubin Mangroves (R.U.M.) முனைப்பின் ஒரு பகுதியாக, சதுப்புநிலப் பகுதிகளைப் பாதுகாப்பது பற்றிய இரண்டு நாள் பயிலரங்கு 2018 பிப்ரவரி மாதம் நடத்தப்பட்டது. பயிலரங்கின்போது, எதிர்காலப் பாதுகாப்புப் பணிக்கான யோசனைகளைப் பங்கேற்பாளர்கள் முன்வைத்தனர்.



*தொழில்நுட்பக் கல்விக்கழக (கிழக்கு) மாணவர்கள் உள்நோக்கல் கருவியைப் பயன்படுத்தி, ஆசிய சிறுநக நீர்நாய்களுக்காக (Aonyx cinereus) அமைக்கப்பட்ட செயற்கை பதுங்குமிடங்களுக்குள் நடப்பவற்றைக் கண்காணிக்கின்றனர்.*

*புகைப்படம்: Buddhima Dinushini Williams*

## உபின் தீவுக்கு மத்திய நிர்வாக அமைப்பு

உபின் தீவை நிர்வகிக்கவும், நிர்வாக விவகாரங்களை முழுமையாக ஒருங்கிணைக்கவும் ஒரே அமைப்பு பொறுப்பேற்கலாம் என்ற யோசனையை Friends of Ubin Network (FUN) அமைப்பு முன்வைத்தது. இதனைத் தொடர்ந்து, 2016 மத்தியில் தீவின் மத்திய நிர்வாக அமைப்பாகத் தேசிய பூங்காக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டது. பசுமைப் பரப்புகளின் நிர்வாகம், இயற்கைவளப் பாதுகாப்பு, பொழுதுபோக்கு நிர்வாகம், பொதுமக்களுடனான எட்டுதல் போன்றவை தவிர, சாலைகள், பாலங்கள், சாக்கடைகள், கடற்கரைகள், கற்சுரங்க ஏரிகள், இடுகாடுகள் ஆகியவற்றின் பராமரிப்பு உள்ளிட்ட கூடுதல் பொறுப்புகளையும் கழகம் இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த நிர்வாக முறையின்கீழ், உபின் தீவைத் தேசிய பூங்காக் கழகம் நன்கு மேற்பார்வையிட்டு, உபின் திட்டப்பணியின் இலக்கை அடைய துணை புரிகிறது.

உள்ளூர் சமூகத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக ஆக்கிரமிப்பு உரிமங்களையும் தேசிய பூங்காக் கழகம் நிர்வகிக்கிறது. உபின் தீவு குடியிருப்பாளர்களின் உரிமக் காலகட்டத்தை முந்திய ஓராண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் கழகம் நீட்டித்திருக்கிறது. கிராமவாசிகள் அங்கேயே தொடர்ந்து தங்கி, தீவின் கிராமிய எழிலுக்குப் பங்களிக்க அரசாங்கம் அனுமதிக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

கிராமவாசிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் சமூக மேம்பாட்டுப் பணிகளைத் தேசிய பூங்காக் கழகம் தொடங்கியிருக்கிறது. குப்பை சேகரித்து அப்புறப்படுத்தும் சேவைகள் வழங்குதல், தீயணைப்புக் கருவிகளை வழங்குதல், சாக்கடைகளையும் மண் பாதைகளையும் பழுதுபார்த்தல் ஆகியன இதில் உள்ளடங்கும்.



*பல ஆண்டுகாலமாகக் குவிந்துபோன 15 டன் கனமுள்ள வேண்டாத பொருட்களைக் கழித்துக்கட்ட உதவி கிடைத்ததை உள்ளூர் சமூகத்தினர் வரவேற்றனர்.*



*வெள்ளத்தைத் தடுக்கவும், பொதுச் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்தவும், மத்திய கிராமத்திலுள்ள சாக்கடைகள் மேம்படுத்தப்பட்டன.*




*குடியிருப்பாளர்கள் பாதுகாப்பாக வெளியில் சென்றுவர உதவியாகப் பாதைகள் பழுதுபார்க்கப்பட்டன.*




*வீடுகளுக்கும் கடைகளுக்கும் கொடுக்கப்பட்ட தீயணைப்புக் கருவிகள், சிறு தீ மூளும்போது அணைக்க உதவுகின்றன.*



*குப்பைத்தொட்டிகளும் குப்பை சேகரிப்பு, அப்புறப்படுத்தல் சேவைகளும், உபின் தீவைச் சுத்தமாக வைத்திருக்க உள்ளூர் மக்களுக்கும் வருகையாளர்களுக்கும் ஊக்கமளிக்கின்றன.*

# Ria Tan-உடன் நேர்காணல்

**இயற்கை ஆர்வலரான Ria Tan, சிங்கப்பூரின் வனவிலங்குகள் பற்றிய wildsingapore.com இணையத்தளத்தை நடத்தி, சிங்கப்பூரின் வனவிலங்கு பாதுகாப்புக்குப் பங்களிக்கிறார். அவரது இரு முக்கிய பேரார்வங்களான வனவிலங்கு பாதுகாப்பு, உபின் தீவு பற்றி அவரிடம் மேலும் கேட்டறிந்தோம்.**



**நீங்கள் கடல்வாழ் உயிரினப் பாதுகாப்பில் அதிகமாக ஈடுபடுகிறீர்கள். இந்த ஆர்வத்தை எது தூண்டியது?**

நான் அறிவியலாளர் அல்ல. கல்லூரி படிப்புக்குப் பிறகு நான் அறிவியல் படிக்கவில்லை. சுங்காய் பூலோ ஈரநில வளப்பகுதியில் தொண்டூழிய வழிகாட்டியாகப் பங்காற்றியபோதுதான் சிங்கப்பூரின் இயற்கை வனச்சூழலை முதன்முதலில் அனுபவித்தேன். தொண்டூழியர்கள், சுங்காய் பூலோ ஈரநில வளப்பகுதியில் இருந்தவர்கள் ஆகியோரின் மூலம், நிலமீட்புக்குச் சுமார் ஆறு மாதங்களுக்குமுன் செக் ஜாவா பற்றி நான் கேள்விப்பட்டேன். செக் ஜாவாவுக்கு வருகையளித்தபோது, அதன் ஈர்ப்பில் சொக்கிப் போனேன். அன்றிலிருந்து, வழிகாட்டுவதிலும், செக் ஜாவா சார்ந்த மற்ற இயற்கை விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் நான் மேலும் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினேன். செக் ஜாவாவின் நிலமீட்பு ஒத்தி வைக்கப்பட்டபோது, அங்கு தொண்டூழிய வழிகாட்டல் நடைமுறையை அமலாக்க தேசிய பூங்காக் கழகத்திற்கு உதவினேன். அதன்பிறகு, சிங்கப்பூரின் மற்ற கரைகளையும் ஆராய்ந்தேன். இப்போது, அலையேற்றத்திற்கு இடைப்பட்ட ஆய்வுகளை நடத்துகிறேன்: ஒவ்வோர் ஆண்டும் 100 நாட்களில் 50 கடற்கரைகளை ஆராய்கிறேன். செமாகாவ் தீவு, சிஸ்தர்ஸ் தீவு கடல் பூங்கா ஆகியவற்றுக்காகக் கடற்கரை வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் உதவி செய்திருக்கிறேன்.

**Friends of Ubin Network அமைப்பில் உறுப்பினராக இருப்பது, உபின் தீவின் பாதுகாப்பு விவகாரங்களிலும் திட்டப்பணிகளிலும் பங்களிக்க உங்களுக்கு எப்படி உதவுகிறது?**

Friends of Ubin Network அமைப்பின்கீழ் அடித்தளமும் சமூகமும் உபின் தீவுக்காக முயற்சி எடுக்கவேண்டும் என இரண்டாம் தேசிய வளர்ச்சி அமைச்சர் டெஸ்மண்ட் லீ அழைப்பு விடுத்தது எனக்கு உண்மையிலேயே ஊக்கமளித்தது. அவர் விடுத்த அழைப்புக்கான பதில் நடவடிக்கையாக, உபின் தீவுக்கான இரு முக்கிய முனைப்புகளில் நான் ஈடுபட்டிருக்கிறேன்.

*புகைப்படம்: Russel Low (for Ria Tan's photo), Ria Tan*

முதலாவதாக, உபின் தீவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் கிராமிய பாணி பொது வரவேற்பு நிகழ்ச்சியான உபின் தினத்தில் நான் அங்கம் வகிக்கிறேன். தொடக்கத்தில் ஒரு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற உபின் தினம், Pesta Ubin எனப் பெயர் மாற்றப்பட்டு, இப்போது சில வாரங்களுக்கு நடத்தப்படுகிறது. கடைசி நாளான உபின் தினத்தன்று "மாபெரும் நிறைவு நிகழ்ச்சி" நடைபெறுகிறது.



*2017 உபின் தின நிகழ்ச்சியில் தொண்டூழியர்கள்*

நான் ஈடுபட்டுள்ள மற்றொரு முனைப்பு Restore Ubin Mangroves (R.U.M.). தீவில் உள்ள கைவிடப்பட்ட குளங்களின் சதுப்புநிலப் பகுதிகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதில் ஆர்வமுள்ளவர்களை இம்முனைப்பு ஒன்றுசேர்க்கிறது. அரசாங்கச் சார்பற்ற அமைப்புகள், உயர்கல்விக் கழகங்கள், தனிப்பட்ட ஆர்வலர்கள், வணிக நிறுவனங்கள் ஆகியன இம்முனைப்பில் ஈடுபட்டுள்ளன.



*R.U.M. தொண்டூழியர்கள்*

**இயற்கையைப் பாதுகாக்கும் முனைப்புகளில் பல ஆண்டுகாலமாகப் பெரும் ஈடுபாடு கொண்டிருக்கும் நீங்கள், உங்கள் விருப்பப் பட்டியலில் எதையாவது நிறைவேற்றி இருக்கிறீர்களா? உங்களுக்கு ஆகப் பெருமையளித்த சாதனை என்ன?**

எனக்கு விருப்பப் பட்டியல் என எதுவும் இல்லை. பொது உயிரினங்களைக் காணும்போது நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். செக் ஜாவா ஈரநிலமும் அதன் துணைக் கரையான Pulau Sekudu தீவும் எனக்கு மிகவும் பிடித்தவை. செக் ஜாவா ஈரநிலத்திற்கு நான் செல்லும் ஒவ்வொரு முறையும் கடற்பசு உணவுண்ணும் தடங்களைப் பார்த்திருக்கிறேன். அவை நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அவை அங்கு இருக்கின்றன என்பதை அறிவதே எனக்குச் சிலிர்ப்பூட்டுகிறது.

என் முகத்தில் புன்சிரிப்பை உண்டாக்கும் ஒன்று Balik Chek Jawa. இதை எனது தனிப்பட்ட சாதனையாக நான் கருதவில்லை. மாறாக, ஒட்டுமொத்த சமூகத்தின் சாதனை இது. 2016-ல் அறிமுகமான இந்த வருடாந்தர நிகழ்ச்சி, Pesta Ubin விழாவின் ஒரு நாளில், பல்வேறு குழுக்களைச் சேர்ந்த தொண்டூழியர்களை ஒன்றுதிரட்டி செக் ஜாவா ஈரநிலத்தைக் கொண்டாடுகிறது.

செக் ஜாவா ஈரநிலத்தை நேசிக்கும் சமூகத்தை இந்த முனைப்பு ஒன்றுசேர்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். Naked Hermit Crabs, Team Sea Grass, the Toddycats, Restore Ubin Mangroves (R.U.M.) Initiative, தேசிய பூங்காக் கழக ஊழியர்கள், தொண்டூழியர்கள் ஆகியோர் இச்சமூகத்தில் உள்ளடங்குவர்.



*2017-ல் நடைபெற்ற Balik Chek Jawa நிகழ்ச்சி*

**நமது சுற்றுப்புறத்திற்கும் வனவிலங்குகளுக்கும் உதவி புரிவதில் ஆர்வமுள்ள சிங்கப்பூரர்களில் பலராலும் மற்ற கடப்பாடுகளின் காரணமாக அடிக்கடி தொண்டூழியம் புரிய இயலவில்லை. நீங்கள் என்னென்ன தியாகங்கள் செய்தீர்கள்? உதவி புரிவதில் ஆர்வமுள்ள இயற்கை ஆர்வலர்களுக்கு ஏதாவது அறிவுரை கூற விரும்புகிறீர்களா?**

*“ நமது கரைகளில் பணி செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும் என்பதால், அதை ஒரு தியாகமாக நான் கருதவில்லை. ஒரு கடற்கரைக்கு வருகையளித்து, அந்த அனுபவத்தைத் தங்களது நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டுகூட ஒவ்வொருவரும் பங்காற்ற முடியும் என்று நான் நம்புகிறேன். விழிப்புணர்வை வளர்ப்பதன்வழி, நீங்கள் ஏற்கனவே ஒரு திருப்பத்தை உண்டாக்குகிறீர்கள். சிங்கப்பூரின் வனப்பகுதிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும் மேலும் ஏதாவது செய்யவும்*

*விரும்புவோருக்கு உதவவே wildsingapore.com இணையத்தளத்தை நான் அமைத்தேன். முழக்கவரியில் கூறப்பட்டுள்ளபடி, உங்களால் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த முடியும்! நம்முடைய வனப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, நீங்கள் பார்த்தவற்றையும் உணர்ந்தவற்றையும் வெளிப்படுத்தி அல்லது பகிர்ந்து கொண்டு, வனப்பகுதிகளின் நீடித்த நிலைத்தன்மைக்காகச் செயல்பட்டாலே போதும். ”*

உபின் தீவு பற்றி மேல்விவரம் அறிய **www.ubin.sg** இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது **nparks_pulau_ubin@nparks.gov.sg** மின்னஞ்சல் முகவரியில் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்